भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

EXTRAORDINARY

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

Part XV Section 1

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

PUBLISHED BY AUTHORITY

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, बुदवार, 4 पिबरवरि 1998/1920 शक

New Delhi, Wednesday, 4th February 1998

புது தில்லி, 1998, பிப்ரவரி திங்கள் 4, புதன்கிழமை

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

New Delhi, the 4th February 1998

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்**

(சட்டமியற்றுத் துறை)

புது தில்லி 4, பிப்ரவரி 1998

The translation in Tamil of the Cutchi Memons Act, 1938 (10 of 1938), The Sugar Development Fund Act, 1982 (4 of 1982), The Foreign Recruiting Act, 1874 (4 of 1874), The Beedi Workers Welfare Cess Act, 1976 (56 of 1976), The Economic Offences (Inapplicability and Limitation) Act, 1974 (12 of 1974), The Married Women's Property Act, 1874 (3 of 1874), The Anand Marriage Act, 1909 (7 of 1909), The Post Office Cash Certificates Act, 1917 (18 of 1917). The Diplomatic and Consular Officers (Oaths and Fees) Act, 1948 (41 of 1948), The Exchange of Prisioners Act, 1948 (58 of 1948), The Hindu Marriages (Validation of Proceedings) Act, 1960 (19 of 1960), The Cine-Workers Welfare Fund Act, 1981 (33 of 1981), The Prevention of Damage to Public Property Act, 1984 (3 of 1984), The Places of Worship (Special Provisions) Act, 1991 (42 of 1991), The Enemy Property Act, 1968 (34 of 1968), The Indian Bills of Lading Act, 1856 (9 of 1856), The Epidemic Diseases Act, 1897 (3 of 1897), The Industrial Disputes (Banking and Insurance Companies) Act, 1949 (54 of 1949), The Sales Promotion Employees (Conditions of Service) Act, 1976

(11 of 1976) are hereby published under the authority of the President and shall be deemed to be the authoritative Texts there of in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

கச்சிமென்கள் சட்டம், 1938 (10/1938), சர்க்கரை வளர்ச்சி நிதியச் சட்டம், 1982 (4/1982), அயல்நாட்டிற்கு ஆளெடுத்தல் சட்டம், 1874 (4/1874), பீடித்தொழிலாளர்கள் நல்வாழ்வு மேல்வரிச் சட்டம், 1976 (56/1976), பொருளியல் குற்றச்செயல்கள் (வரம்பு பொருந்துறாமைச்) சட்டம், 1974 (12/'1974), திருமணமான மகளிரின் சொத்துச் சட்டம், 1874 (3/1874), ஆனந்த் திருமணச் சட்டம், 1909 (7/1909) அஞ்சலகப் பண உறுதிச் சான்றுகள் சட்டம், 1917 (18/1917). தூதரக மற்றும் துணைத் தூதரக அலுவலர்கள் (ஆணை மொழிகள் மற்றும் கட்டணங்கள்) சட்டம், 1948 (41/1948), கைதிகள் பரிமாற்றச் சட்டம், 1948 (58/1948), இந்துத் திருமணங்கள் (நடவடிக்கைகளைச் செல்லுந்தன்மையுடையனவாக்குதல்) சட்டம், 1960 (19/1960), திரைப்படத் தொழிலாளர்கள் நலப்பாட்டு நிதியச் சட்டம், 1981 (33/1981), பொதுச் சொத்திற்குச் சேதம் விளைவித்தலைத் தடுத்தல் சட்டம், 1984 (3/1984), வழிபாட்டு இடங்கள் (தனியுறுவகையங்கள்) சட்டம், 1991 (42/1991), பகைவர் சொத்துச் சட்டம், 1968 (34/1968), இந்தியக் கப்பற்சரக்குப் பட்டியல்கள் சட்டம், 1856 (9/1856), கொள்ளை நோய்கள் சட்டம், 1897 (3/1897), தொழில்துறைப் பூசல்கள் (வங்கித் தொழில் மற்றும் காப்பீட்டு நிறுமங்கள்) சட்டம், 1949 (54/1949), விற்பனை ஊக்குவிப்பு பணிபுரிவோர் (பணிவரைக் கட்டுகள்) சட்டம், 1976 (11/1976) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பொதுச் சொத்திற்குச் சேதம் விளைவித்தலைத் தடுத்தல் சட்டம், 1984

(சட்ட எண் 3/1984)

[1984, மார்ச் 16]

பொதுச் சொத்திற்குச் சேதம் விளைவித்தலைத்தடுப்பதற்கும் அவை தொடர்பான பொருட்பாடுகளுக்கு வகைசெய்வதற்குமானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் முப்பத்து ஐந்தாவது ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், பொதுச் சொத்திற்குச் சேதம் விளைவித்தலைத் தடுத்தல் சட்டம், 1984 என்று வழங்கப்பெறும்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 1984 ஜனவரி 28 ஆம் நாள் முதல் செல்லாற்றல் பெற்றுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி—

(அ) ''சொத்தழிப்பு'' என்பது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின், பிரிவு 425 இல் உள்ள அதே பொருளினை உடையதாகும் ; 45/1860

(ஆ) ''பொதுச் சொத்து'' என்பது, (இயந்திரத் தொகுதி உள்ளடங்கலாக) நிலையியல் சொத்தானாலும் அல்லது அசைவியல் சொத்தானாலும், எந்தச் சொத்து—

(i) மைய அரசாங்கத்தால், அல்லது

(ii) மாநில அரசாங்கம் எதனாலும், அல்லது

(iii) உள்ளாட்சி அதிகாரஅமைப்பு எதனாலும், அல்லது

(iv) மைய, மாகாண அல்லது மாநிலச் சட்டத்தினாலோ அல்லது அதன் வழியாலோ நிறுவப்பட்ட மாநகராட்சி எதனாலும், அல்லது

(v) நிறுமங்கள் சட்டம், 1956 இன் பிரிவு 617இல் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள நிறுமம் எதனாலும், அல்லது 1/1956

(vi) மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாகும் நிறுவனம், அமைப்பு அல்லது பொறுப்பேற்பு நிறுவனம் எதனாலும்,

சொந்தமாக வைத்திருக்கப்படுகிறதோ அல்லது அவற்றின் உடைமையில் அல்லது கட்டாளுகையின் கீழ் உள்ளதோ அந்தச் சொத்து எதுவும் என்று பொருள்படும் :

வரம்புரையாக : மைய அரசாங்கத்தால் அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசாங்கங்களால் அல்லது பகுதி மைய அரசாங்கத்தாலும், பகுதி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசாங்கங்களாலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வகைசெய்யப்பட்டுள்ள நிதியங்களால் முழுமையாக அல்லது கணிசமாக, நிறுவனம், அமைப்பு அல்லது பொறுப்பேற்பு நிறுவனத்திற்கு நிதியுதவியளிக்கப்பட்டிருந்தாலன்றி, மைய அரசாங்கம் அத்தகைய நிறுவனம் அமைப்பு அல்லது பொறுப்பேற்பு நிறுவனம் எதனையும் குறித்துரைத்தல் ஆகாது.

பொதுச் சொத்திற்குச் சேதம் விளைவிக்கும் சொத்தழிப்பு.

3. (1) உட்பிரிவு (2) இல் சுட்டப்பட்டுள்ள தன்மையதான பொதுச் சொத்து அல்லாத பிற பொதுச் சொத்து எதனையும் பொறுத்த செயல் எதனையும் செய்வதால் சொத்தழிப்புச் செய்கிற எவரொருவரும், ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனையும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) நீர், ஒளி, விசை அல்லது ஆற்றலைத் தயாரித்தல், பங்கீடு செய்தல் அல்லது வழங்குதல் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கட்டிடம், கருவிகல அமைவு அல்லது பிற சொத்து,

(ஆ) எவையேனும் எண்ணெய்க் கருவிகல அமைவுகள்,

(இ) எவையேனும் கழிவுநீர் கட்டுமானங்கள்,

(ஈ) ஏதேனும் சுரங்கம் அல்லது தொழிற்சாலை,

(உ) ஏதேனும் பொதுப் போக்குவரத்து வழிவகை அல்லது தொலைத் தொடர்பு அல்லது அவை தொடர்பாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கட்டிடம், கருவிகல அமைவு அல்லது பிற சொத்தாக இருக்கிற,

பொதுச் சொத்து எதனையும் பொறுத்த செயல் எதனையும் செய்வதால் சொத்தழிப்பு செய்யும் எவரொருவரும், ஆறு மாதங்களுக்குக் குறையாத ஆனால் ஐந்து ஆண்டுகள்வரை நீடிக்கலாகும் காலஅளவுக்குக் கடுஞ்சிறைத் தண்டனையும், அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் :

வரம்புரையாக : நீதிமன்றம், அதனுடைய தீர்ப்புரையில் பதிவுசெய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, ஆறு மாதங்களுக்குக் குறைவானதொரு கால அளவிற்குச் சிறைத்தண்டனையை அளிக்கலாம்.

**தீயினால் அல்லது வெடிமருந்துப் பொருளினால் பொதுச் சொத்திற்குச் சேதம் விளைவிக்கும் சொத்தழிப்பு.**

4. பிரிவு 3 இன் உட்பிரிவு (1)இன் அல்லது உட்பிரிவு (2)இன்படியான குற்றச்செயல் ஒன்றைத் தீயின் அல்லது வெடி மருந்துப் பொருளின் மூலம் செய்கிற எவரொருவரும், ஓராண்டிற்குக் குறையாத ஆனால் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவுக்குக் கடுஞ்சிறைத்தண்டனையும், அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் :

வரம்புரையாக : நீதிமன்றம், அதனுடைய தீர்ப்புரையில் பதிவு செய்யப்பட வேண்டிய தனியுறு காரணங்களுக்காக ஓராண்டிற்குக் குறைவானதொரு கால அளவிற்குச் சிறைத்தண்டனை அளிக்கலாம்.

**பிணையம் குறித்த தனியுறு வகையங்கள்.**

5. பிரிவு 3இன் அல்லது பிரிவு 4இன்படி தண்டிக்கப்படத்தக்கதான குற்றச்செயலைச் செய்ததாகக் குற்றம்சார்த்தப்பட்ட அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட நபர் எவரும் காவலில் இருப்பாராயின், விடுதலை செய்யப் படுவதற்கான விண்ணப்பத்தினை மறுத்துரைப்பதற்கு அரசுத் தரப்பிற்கு வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அவர் பிணையத்தின் பேரிலோ, தம்முடைய சொந்தமுறியின் பேரிலோ விடுதலை செய்யப்படுதல் ஆகாது.

**காப்புரை.**

6. இந்தச் சட்டத்தின் வகையங்கள், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள ஏதேனும் பிற சட்டத்தின் வகையங்களுக்குக் கூடுதலாகவும் அவற்றைத் திறக் குறைவு செய்யாமலும் இருத்தல் வேண்டும், மற்றும் இந்தச் சட்டத்தில் அடங்கி யுள்ள எதுவும், நபர் எவருக்கும் இந்தச் சட்டத்திற்குப் புறம்பாக (புலனாய்வு என்னும் முறையிலோ பிறவாறாகவோ) அவருக்கு எதிராக நிறுவப்பட்டிருக்க லாகும் அல்லது எடுக்கப்பட்டிருக்கலாகும் நடவடிக்கையிலிருந்து விலக்களித்தல் ஆகாது.

**நீக்கறவும் காப்புரையும்.**

*8/1984* 7. (1) பொதுச் சொத்திற்குச் சேதம் விளைவித்தலைத் தடுத்தல் அவசரச் சட்டம், 1984 ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) அத்தகைய நீக்கறவு இருந்த போதிலும், கூறப்பட்ட அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின் நேரிணையான வகையங்களின்படி செய்யப்பட்டுள்ளதாக அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.